# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்


தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

மலர் : 10
இதழ் : 10
ஆகஸ்ட் 2014




THE HOLY TRINITY CHURCH - ஷாலோம் பேராலயம்
கோய்க்கா கிராமம் இராஜஸ்தான் - 01.07.2014


ஆசிரியர்.
பேராயர். வே. தேவதாஸ்

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

## CSI பேதுரு ஆலயம் பாளையங்கோட்டை - 22.06.2014




ஆலயத்திற்கு முன்பாக நமது பீல் சுதேச ஊழியர்கள்
சகோ. ஜித்மால் பட்டேல், சகோ. அமர்சிங் ரட்டுவா,
சகோ. ருமியேல் D. ரனா, சகோ. மகேஷ் R. பார்மர்,



சுதேச ஊழியர்களின் சாட்சி & பிரதிஷ்டை வேளை



சேகரகுருக்கள் மற்றும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்களுடன்

## அரசு போக்குவரத்து கழக ஜெப ஐக்கியம், கோவை - 28.06.2014



ஜாலோர் சுதேச ஊழியர் சகோ. பரசிங் பாமோர் (சரக்காணி, இராஜஸ்தான்) சாட்சி வேளை



சுதேச ஊழியர் சகோ. பரசிங் பாமோர் அவர்களின் பிரதிஷ்டை வேளை



சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன



சுதேச ஊழியரைத் தாங்கும் சகோ. ஜோசப் அவர்கள் குடும்பம்

## உங்கள் சகோதரனிடமிருந்து



***கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,***

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவ கிருபையாலும் உங்கள் அனைவரின் ஜெபத்தினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் சிறப்பாக வளர்ந்து வருகிறது. உங்கள் அனைவரின் ஜெபங்களுக்காக, அன்பின் ஆதரவுகளுக்காக தேவனைத் துதித்து, நன்றி கூறுகிறேன்.

கடந்த ஜுலை மாதம் முழுவதும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்து நடத்தினார். ஜுலை 1–ம் தேதியன்று நம் ஊழியத்தின் பாதையில் 24–ம் ஆண்டில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை தந்தார். ஜுலை 1 முதல் 3 வரை நம் ஊழியங்களை அதிகமாக நேசித்து ஜெபிக்கும், நம் ஊழியத்தின் Board Member, **Prof. C.S.கிறிஸ்டோபர், டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர்** மற்றும் அவர்களின் மூத்த மகளின் குடும்பம் **சகோ. ஜோசப் தங்கசாமி**, **சகோதரி. லாவண்யா ஜோசப்**, அன்பு மகள் **சகோதரி. ஜோவன்** மற்றும் இளைய மகள் **சகோதரி. சுகன்யா ஜோசப்** மற்றும் மகன் **சாமுவேல்** ஆகியோர் பணித்தளத்திற்கு வருகை தந்தார்கள். அதன் விபரங்களை உள்ளே எழுதியுள்ளோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள்.

ஜுலை 1–3 வரை 23–ம் வருட நிறைவு ஸ்தோத்திர கூடுகை அனைத்து ஊழியர் குடும்பங்களை இணைத்து வெகு ஆசீர்வாதமாக நடைபெற்றது. இன்னும் 2 வருடங்களில் (2016 ஜுலை வெள்ளி விழா ஆண்டிற்குள்) 1000 சுதேச ஊழியர்கள், 1000 கிராம சபைகள், குறைந்தது 1 இலட்ச விசுவாச குடும்பங்களை தேவனண்டை வழிநடத்தவும், குறைந்தது 500 கிராம ஆலயங்களைக் கட்டி முடிக்க தீர்மானம் எடுத்து ஜெபித்து அர்ப்பணித்தார்கள்.

**ஆலய பிரதிஷ்டைகள்**

ஜுலை மாதத்தில் இராஜஸ்தானில் கோய்க்கா பேராலயம், அம்ளிப்பாடா, இட்டாலா (புரியா), தன்புரி, பாடிலசோடி மற்றும் குஜராத்தில் நெல்சூர் ஆகிய 5 ஆலயங்களை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். ஆலயக் கட்டுமானத்திற்காக நிதி உதவிசெய்த **சகோ. ஸ்டீபன்** (குளத்துக்குடியிருப்பு) மற்றும் **இயேசு விடுவிக்கிறார்** மூலம் 2 ஆலயங்களை கட்டிக்கொடுத்த **சகோ. ஜஸ்டஸ்** (திருநெல்வேலி) அவர்களும் பணித்தளத்திற்கு வருகை தந்து ஆலயங்களை பிரதிஷ்டை செய்து, ஊழியங்களை நிறைவேற்றினார்கள். இதுவரை 270 ஆலயங்களைக் கட்டி பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்துள்ளார். தேவன் தந்த பாரத்தின்படி இவ்வருடத்திற்குள் 100 புதிய கிராம ஆலயங்களை கட்டி பிரதிஷ்டை செய்யவும் 2016 ஆண்டிற்குள் (வெள்ளி விழா ஆண்டிற்குள்) 500 கிராம ஆலயங்கள் கட்டப்பட தேவன் கிருபை தரும்படியாக, தேவையான ஆதரவாளர்களை தேவன் எழுப்பி தர ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

**எழுப்புதல் கூட்டங்கள்**

நம் ஊழியங்களை அதிகம் நேசிக்கும் **சகோ. ஜீவி ஜெபராஜ்** (சேரா ஊழியங்கள், சென்னை) அவர்கள் 3 மாநிலங்களில் கங்கேலா, காளாகேத்,கோய்க்காவில் நடைபெற்ற சபை எழுப்புதல் கூட்டங்களில் செய்தியளித்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் பெலத்துடன் விடுதலை, சுகம் மற்றும் அநேகர் அபிஷேகம் பெற்று சாட்சி கொடுத்தார்கள்.

**புதிய சுதேச ஊழியர்கள்**

தேவ கிருபையால் 3 மாநிலங்களிலிருந்து 07–07–2014 அன்று 26 புதிய சுதேச ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊழிய பயிற்சிக்காக சேர்க்கப்பட்டார்கள். மூத்த சுதேச ஊழியர்களால் கிளை சபைகள் புதிய கிராமங்களில் உருவாக்கப்பட்டு, சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு உள்ளார்கள். 2 வருடங்களுக்குள் புதிதாக 500 சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட்டு, 2016–ம் ஆண்டில் 1000 சுதேச ஊழியர்களாக பயிற்சி கொடுக்கப்படவும், புதிதாக எழுப்பப்படும் 500 ஊழியர்ளை ஜெபித்து தாங்கும் 500 ஆதரவாளர்கள் எழும்பவும் ஜெபியுங்கள்.

**1 வருட ICT வேதாகம பயிற்சி**

சேவா பாரத் ஸ்தாபனத்தின் மூலமாக நடைபெறும் ICT வேதாகம பயிற்சி மூலம் இராஜஸ்தானில் பேடவ் மற்றும் கும்புரா பகுதியிலும், குஜராத்தில் ஜாலோத் மற்றும் ஃபத்தேபுரா பகுதியிலும் 40 சுதேச ஊழியர்கள் (4 Batches) 01–07–2014 முதல் பயிற்சி பெற்று வருகிறார்கள். 1 வருட பயிற்சி சிறப்பாக பெற்று சிறந்த தலைவர்களாக உருவாக்கப்பட ஜெபியுங்கள்.

**இதர ஊழியங்கள்**

ஜுலை 12–ம தேதி சனிக்கிழமை என் ஆவிக்குரய தகப்பனான, கோவை அப்போஸ்தல ஜெப வீடு **போதகர். ஜோயல் ஆனந்தராஜ்** அவர்களின் ஊழியப்பாதையின் 40–வது ஆண்டு விழாவில் பங்கு பெறவும், தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். தேவன் என்னை இரட்சித்து, அபிஷேகித்து ஊழிய அழைப்பை தந்த சபைக்காக, அன்பு போதகருக்காக தேவனைத் துதிக்கிறேன்.

ஜுலை 13–ம் தேதி சென்னை தண்டையார்பேட்டை இயேசு நம்மோடு சபையின் இரண்டு ஆராதனைகளில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். அன்பு **போதகர். சுவாமிதாஸ்** அவர்கள் நம் ஊழியத்திற்கு ஆலயம் கட்டிக் கொடுக்க சபை விசுவாசிகளை ஊக்கப்படுத்தி நம் ஆலயக்கட்டுமான பணிக்கான காணிக்கை கவர்களை கொடுத்து ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி சேகரிக்க உற்சாகப்படுத்தினார்கள். அன்பு **போதகர் சுவாமிதாஸ்** அவர்களுக்காகவும், இயேசு நம்மோடு சபைக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

ஜுலை 14–ம் தேதி தேனி மாவட்ட போதகர்கள் ஐக்கியத்தில் எழுப்புதல் செய்தியைக் கொடுக்கவும் ஒவ்வொரு சபை வளருகிறதற்கு பவுல் அப்போஸ்தலனைப் போல எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்பதை பகிர்ந்து கொள்ளும் போது, ஜெப வேளையில் ஆத்தும பாரத்தையும், புதிய அபிஷேகத்தையும், புதிய தரிசனத்தையும் தேவன் தந்தருளினார். அநேக போதகர்கள் சபையாக ஷாலோம் மிஷனெரி பணியைத் தாங்க முன் வந்துள்ளார்கள். இந்த கூடுகைக்கு அழைப்பு கொடுத்த ஆண்டிப்பட்டி Faith திருச்சபை **போதகர். தீமேத்தேயு** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

தேவ கிருபையால் வட இந்தியாவில் புது தில்லியை மையமாக வைத்து, மிஷனெரி ஸ்தாபனங்கள், சபைகளின் Network அமைப்பாகிய **CONCERN** ஜுலை 17 & 18–ல் நடத்திய ஊழியத்தலைவர்கள் கூடுகையில் இயேசுவைப் போல் ஊழியம் என்ற தலைப்பில் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும் வட இந்திய எழுப்புதலுக்காக இணைந்து ஜெபிக்க தேவன் கிருபை செய்ததார். பங்கு பெற்ற 50 மிஷனெரி சங்கத் தலைவர்கள், மூத்த போதகர்கள் ஆவியானவரால் தொடப்பட்டு சபை மற்றும் தேசத்தின் எழுப்புதலுக்காக தங்களை அர்ப்பணித்தார்கள்.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் கடந்த ஜுலை மாதம் ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக தாங்கப்படும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் விசுவாசிகளின் பிள்ளைகள் என சுமார் 1078 பிள்ளைகள், தங்களைத் தாங்கும் ஆதரவாளர்களுக்கு எழுதிய நன்றி கடிதங்கள் சேகரிக்கப்பட்டது. **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கடந்த மாதம் வாங்கோல் (குஜராத்), சாகுவானி (ம.பி) ஆகிய சபைகளில் ஞாயிறு ஆராதனைகளில் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள்.

**ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை**

வளர்ந்து வரும் நம் மிஷனெரி பணிகளை தாங்குவதற்கு உடனடியாக 1000 ஆதரவாளர்கள் மற்றும் 100 பிரதிநிதிகள் எழுப்பப்பட வேண்டும். அதற்காக தேவ கிருபையால் 23–08–2014 (சனிக்கிழமை) அன்று நாகர்கோவிலிலும், 24–08–2014 அன்று சென்னை பட்டணத்திலும் ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. **சகோ.மோகன் சி.லாசரஸ்** அவர்கள் சிறப்புச் செய்தி கொடுக்க இருக்கிறார்கள். சென்னையில் **போதகர். ஆல்வின் தாமஸ்** அவர்கள் சிறப்பு ஆராதனை நடத்தி தர முன் வந்துள்ளார்கள். சகல ஆயத்தங்களுக்காகவும், கூட்ட ஒழுங்குகளுக்காகவும், தேவைகள் சந்திக்கப்படவும், தடைகள் யாவும் நீங்க ஜெபியுங்கள். இவ்விரு கூடுகையினிமித்தமாக குறைந்தது ஜெபித்து தாங்கும் 1000 ஷாலோம் பங்காளர்கள் கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

**ஜெபியுங்கள்**

- ❖ பருவ மழை இன்னும் சரியாக பெய்யாதபடியால் அதிகமான வறட்சி உள்ளது. தேவன் தாமே நல்ல மழையைக் கட்டளையிட்டு விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக தாங்கப்பட்டு வரும் ஆதிவாசி மாணவர்களின் படிப்பிற்காக, குறிப்பாக உயர் கல்வி படிப்பு பெற்று வரும் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும், தேவையான நிதி உதவி கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.
- ❖ நம் தூத்துக்குடி தலைமை அலுவலகம், தாகோத் பணித்தள அலுவலகம், Compassion Project, ஷாலோம் பள்ளி மற்றும் விடுதி ஊழியங்கள், ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை மற்றும் அனைத்து துறை ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

❖ மகன் டைட்டஸ் மற்றும் மெர்லின் இருவரும் குஜராத்தில் எங்களுடன் இணைந்து செயல்படுகிறார்கள். அவர்களுக்கு தேவன் தந்த கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதிக்கவும், ஏற்ற வேளையில் சுகப்பிரசவம் நடைபெற ஜெபியுங்கள். மகன் ஷாலோம் பெங்களூரில் உள்ள NICC கல்லூரி மூலமாக Media–ல் MBA படிக்கச் செல்கிறார். அன்பு மகள் ஷெக்கினா ரஷ்யாவிலிருந்து வந்து 2 மாதங்கள் இங்கு இருந்து 1 மாத Practical work – ற்காக AVM Hospital, Tuticorin–ல் பணி செய்கிறாள். கர்த்தருடைய சித்தத்தை முழுமையாக செயல்படுத்த தேவன் எங்கள் குடும்பத்தில் அனைவருக்கும் சுக பெலனைத் தந்து தேவ ஞானத்துடன் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி பீல் மக்கள் தரிசன ஊழியங்களை நிறைவேற்ற அனுதினமும் ஜெபியுங்கள்.

உங்கள் யாவருக்காகவும் நாங்கள் அனுதினமும் ஜெபிக்கிறோம். தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

**“உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் “** – செப்பனியா–3:17 என்ற வசனத்தின்படி கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்) என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

---

**ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு**

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **“வருமான வரிவிலக்குச் சான்று”** ***(80G)*** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

**‘‘அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்’’ –ரோமர் 12 : 11**

# நம் தேசத்தில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்



சிறப்புச் செய்தி : பேராயர். V. தேவதாஸ்

***கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே...***

யோவேல் 2 : 21 – 32 வரை வசனங்களை தியானித்துப் பார்க்கும்போது, அதில் கர்த்தர் நான்கு விதமான பெரிய காரியங்களைச் செய்கிறார். அவற்றை நாம் ஒன்றன்பின் ஒன்றாக காண்போம்.

**1. பட்சித்த வருஷங்களின் விளைவைத் திரும்ப அளிக்கும் பெரிய காரியம்**

தேவ ஜனத்திற்காக தேவன் வாக்குத்தத்தம் செய்கிறார். பட்சித்த வருஷங்களின் விளைவை திரும்ப அளிப்பேன். கடந்த நாட்களிலும், தேவ பலனை அடையாமற் போய் விட்டாயா? சோர்ந்து போகாதே! தேவன் இழந்துபோன பிரயாசத்தின் பலனை திரும்பச் சேர்த்து வரும் நாட்களில் கட்டாயம் தருவார். கடந்த நாட்களில் என் பிரயாசங்களில், உழைப்புகளில், ஊழியங்களில், பலனில்லையே என்று சிந்திக்கிறாயோ? தேவன் பட்சித்த வருஷங்களின் விளைவை திரும்பக் கொடுப்பார். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்ன? தேவ ஜனம் கர்த்தரிடத்தில் மனப்பூர்வமாக திரும்ப வேண்டும் (யோவேல் 2:13) வெளிப்பிரகாரமாக இஸ்ரவேல் ஜனம் வஸ்திரங்களை கிழித்து தேவனிடத்தில் மனந்திரும்புகிற வெளிவேஷமல்ல. இருதயத்தை கிழித்து உள்ளான மனந்திரும்புதலை தேவன் உன்னிடத்தில் எதிர்பார்க்கிறார். நீ கடந்த வருடங்களில், நாட்களில் ஆண்டவரை துக்கப்படுத்தின காரியத்திலிருந்து நீ மனந்திரும்ப வேண்டும். வெளிப்பிரகாரமாக மனிதர்கள் காணும் வஸ்திரங்களைக் கிழித்து தேவனண்டை திரும்பும் பக்திவேஷமல்ல, உண்மையான மனந்திரும்புதல்.

கர்த்தரிடத்தில் முழு மனதுடன் தேவ ஜனம் ஒப்புக்கொடுக்கும் போது **“களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சை ரசமும், எண்ணெயும் வழிந்தோடும்.”** (யோவேல் 2:24) **“கர்த்தருக்கு போஜனபலிகளையும், பானபலிகளையும் செலுத்துவதற்கான ஆசீர்வாதத்தை தந்தருளுவார்.”** (யோவேல் 2:14) இந்த ஆண்டில் தேவன் உங்களை ஆசீர்வதித்து, தேவனுக்காக கொடுக்கவும், ஊழியங்களைத் தாங்கவும் உங்களை உயர்த்துவார்.

**2. சம்பூரணமாக ...... திருப்தியடைந்து ...... அதிசயமாய் நடத்தி வரும் பெரிய காரியம்**

நாம் தேவ பிள்ளைகள். தேவனிடத்தில் மனந்திரும்பும்போது, ஒப்புரவாகும் போது தேவன் மகிழ்ச்சியடைகிறார். எனவே அவர் நம்மை சம்பூரணமாக ஆசீர்வதிக்கிறார். திருப்தியடையச் செய்கிறார். அதிசயமாய் நடத்திச் செல்கிறார். நாங்கள் தேவ பணி செய்யும் பீல் ஆதிவாசி மக்கள் பெரும்பாலும் குடிகாரர்கள், கொள்ளைக்காரர்கள், மந்திரவாதிகளை நாடிச் சென்று பிசாசின் பிடியில் சிக்கியிருக்கும் ஜனங்கள். இவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழாக உள்ளார்கள். ஆனால் இயேசுவை விசுவாசித்து இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு அவர்கள் வாழ்க்கையில் செழிப்பும் ஆசீர்வாதமும் பெருகின.

பாரேவா கிராமத்தில் மகன்பாய் என்பவர் குடும்பத்தையும், வரம்கேடா கிராமத்தைச் சேர்ந்த நர்சிங்பாய் என்பவர் குடும்பத்தையும் நான் அறிவேன். சில வருடங்களுக்கு முன்பு அவர்கள் ஜெபிக்க வந்த போது பிசாசுகள் பிடித்து, பில்லிசூனியத்தால் பாதிக்கப்பட்டு, குடித்து, நிலம், வீடு ஆஸ்திகளை விற்று, தரித்திரராகி, நோயுற்று உயிர் வாழ்வது எதற்காக என்ற நிலையில் இயேசுவைப் பற்றி அறிந்து ஜெபிக்க வந்தார்கள். எந்தவித பலிகள் செலுத்தாமல், செலவின்றி, வருத்தமின்றி இலவசமாக இயேசுவின் அன்பைப் பெற்று விடுதலையடைந்தார்கள். இன்று அவர்கள் சொல்லுகிறார்கள் பாவங்கள், சாபங்கள் நீங்கி, வீடுகள் கட்ட தேவன் உதவினார். வயல் நிலங்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் விளைச்சல், கடன் தொல்லையெல்லாம் நீங்கி விட்டது. தரித்திரம் நீங்கி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக வாழ தேவன் உதவினார். ஊழியங்களுக்கு அதிகமாக காணிக்கை கொடுக்கிறோம் என்று சாட்சி கூறினார்கள். அன்பானவர்களே, உங்கள் வாழ்க்கை வனாந்திரம் போன்ற வாழ்க்கையோ, நம்பிக்கையற்ற வாழ்க்கையோ, தேவனை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள். விசுவாசியுங்கள். ஏனென்றால் அவர் நாமம் அதிசயமானது. உங்கள் வாழ்வில் அற்புதங்கள், அதிசயங்கள் இவ்வாண்டு காணச் செய்வார். முன்மாரியையும், பின்மாரியையும் ஊற்றுவார். **"வனாந்திரத்லே மேய்ச்சல்கள் உண்டாகும்".** (யோவேல் 2:22,24) சம்பூரணமாகி, திருப்தியடைந்து அதிசயமாய் நடத்தி வந்த கர்த்தரைத் துதிப்பீர்கள்.

### 3. ஆவிக்குரிய நன்மையான ஈவுகளை ஊற்றும் பெரிய காரியம்

**"அதற்கு பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்." "ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்".** (யோவேல் 2 : 28,29)

பழைய ஏற்பாட்டில் தேவ ஆவியானவரின் அபிஷேகம் தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள் மீது ஊற்றப்பட்டது. ராஜாக்கள், தீர்க்கதரிசிகளை தேவன் ஊழியர்களாக அபிஷேகித்தார். தேவன் செயல்படும் வேலைகளில் இறங்கி வந்து செயல்பட்டார். ஆனால் வேதம் சொல்லுகிறது. **"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம்பற்றினார். இவரை சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்".** (எபி 1:1,2) குமாரன் இயேசுவின் மூலமாக இரட்சிப்பு மட்டுமல்ல வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆவியானவரும் நம்மீது ஊற்றப்படுகிறார். உலக ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிறார். நம் குமாரர், குமாரத்திகள் மீதும் ஊற்றுவார். தேவ பணிவிடை செய்யும் அனைத்து ஊழியர் மீதும் ஊற்றுவேன் என்கிறார். அவர் ஆவியை ஊற்ற ஆயத்தமாயிருக்கிறார். நாம் தான் விசுவாசத்துடன், வாஞ்சையுடன் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆவியில் நிரப்பப்படுதல் மட்டுமல்ல, மேலான உன்னத அனுபவங்களையும் தருகிறார். தீர்க்கதரிசனம் சொல்லும் வரங்களையும், அற்புதங்களைச் செய்யும் வரங்களையும்,

சொப்பனங்களையும், தேசத்தைக் குறித்தும் ஊழியங்களை குறித்தும் தரிசனங்களையும் தேவன் தர வாக்குக் கொடுக்கிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே ஆவிக்குரிய வாழ்வில் நீ பெலன் கொள். சத்துருவை மேற்கொள். உலக ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, உன்னத அனுபவங்களையும் தேவன் இந்த வருடத்தில் உங்களுக்கும், உங்கள் குமாரர், குமாரத்திகளுக்கும், உங்கள் சபையின் மூப்பர்கள், உங்கள் ஊழியத்திலுள்ள அனைத்து பணிவிடைக்காரர்களுக்கும் தேவன் தர ஆயத்தமாயுள்ளார்.

**4. கர்த்தர் தமது தேசத்திற்காக வைராக்கியம் கொள்ளும் பெரிய காரியம்**

2010–ம் ஆண்டில் நம் தேசத்தில் தேவன் வைராக்கியம் கொண்டு தேவ ஜனத்தை கடாட்சிப்பார். (யோவேல் 2:18) கர்த்தர் சொல்கிறார். "தேசமே (தேவ ஜனமே) பயப்படாதே மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்". (யோவேல் 2 : 21) நாம் சபையாக, தேவ சபையாக என்ன செய்ய வேண்டும்? **"ஜனத்தைக் கூட்டுங்கள், சபையை பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்ணுகிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டு புறப்படுவார்களாக." "அப்பொழுது கர்த்தர் தமது தேசத்திற்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தை கடாட்சிப்பார்.;"** (யோவேல் 2 : 16,18)

கர்த்தர் சொல்கிறா : முதலாவது ஜனத்தைக் கூட்டுங்கள். ஒருமனதுடன், ஐக்கியத்துடன் தேவ ஜனங்கள் கூட வேண்டும். ஆதி அப்போஸ்தலர் காலத்தில் இருந்த ஒருமனம், ஐக்கியம் நமக்குத் தேவை. சபையை பரிசுத்தப்படுத்துங்கள். தேவ சபை பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும். தேவனுக்கு பிரியமில்லாதவற்றை விட்டுவிட்டு தேவ சித்தத்தை சபை பூர்த்தி செய்ய வேண்டும். முக்கியமாக 17–ம் வசனத்தில் தேவன் தேசத்திற்காக வைராக்கியம் கொள்வதற்காக கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்களுக்கு ஒரு பெரிய பொறுப்பு உண்டு. அவர்கள் மண்டபத்துக்கும், பலிபீடத்திற்கும் நடுவே அழுது ஜெபிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு **"தேவ ஜனமாகிய நாம் ஆசாரியர்களாக, லேவியராக தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம்."** (1 பேதுரு 2:9) தேவனிடத்திலிருந்து உலக ஆசீர்வாதங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்ட நாம் அமைதியாக, திருப்தியாக இருக்க கூடாது. தேசத்திற்காக தேவன் வைராக்கியம் கொள்ள தேவ ஜனத்தை கடாட்சிக்க அவர்கள் திறப்பின் வாசலில் நின்று ஜெபிக்க வேண்டும்.

அப்படியே தேவ ஜனம் கூடி கர்த்தாவே நீர் உமது ஜனத்தை தப்பவிட்டு புறஜாதிகள் அவர்களை பழிக்கும், நிந்தைக்கும் உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும். **"உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக".** (யோவேல் 2: 17) தேவ ஜனங்கள் தேசத்திற்காக ஜெபிக்கும் போது, தேவன் கட்டாயம் வைராக்கியம் கொள்வார். தேவ ஜனத்தை உபத்திரவத்திலிருந்து கடாட்சிப்பார். மட்டுமல்ல **"வானத்திலும், பூமியிலும் இரத்தம், அக்கினி, புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களை காட்டுவேன்".** (யோவேல்2:30) தேவன் மோசே, யோசுவாவுடன் இருந்தது போல நம் ஊழியங்களுடன், ஊழியர்களுடன், தேவ வசனத்துடன் நின்று கடாட்சிப்பார். கர்த்தர் தாமே இந்த நான்கு வகைகளான பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையிலும், நம் ஊழியங்களிலும் நடப்பித்து, இயேசுவின் நாமத்தை உயர்த்திட அருள்புரிவாராக.

## பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

### குஜராத் மாநிலம்

**Pr. மங்கல்சிங் வகோனியா நன்டேலவ்**

ரமேஷ் என்பவரின் குடும்பம் சாத்தானின் பிடியினால் மிகவும் பாதிக்கப்பட்டு அடிக்கடி சண்டை போடுவார்கள் இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. நாவல்புரியா வாங்கோல்**

மக்கன்பாய் என்ற சகோதரர் 2 வருடமாக அசுத்த ஆவியின் பிடியினால் பாதிக்கப்பட்டார். மந்திரவாதியிடம் சென்றும் பலனில்லை. இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

மார்த்தா என்ற சகோதரியை தேள் கடித்துவிட்டது இவருக்காக ஜெபித்தபோது தேவன் பாதுகாத்தார்.

**Pr. அர்விந்த் டாமோர் லிம்பாகேடி**

காளிபேன் என்ற சகோதரி சாத்தானின் பிடியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இயேசுவை பற்றி கூறி இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. கேம்சந்த் மாவி போர்கேடா**

நகியா என்ற சகோதரி 3 மாதமாக உதிரப்போக்கினால் கஷ்டப்பட்டார். மந்திரம் செய்தும் பலனில்லை. இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

மன்னுபாய் என்ற சகோதரனின் மனைவி சரீரத்தில் கட்டி ஒன்று வந்து மிகவும் கஷ்டப்பட்டார். சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. பாரத் டாமோர் தோலக்கக்ரா**

கீதா என்ற சகோதரியின் சுகப்பிரசவத்திற்காக ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகப்பிரசவத்தை கட்டளையிட்டார்.

**Pr. சாமுவேல் பார்கி இட்டா**

துளி என்ற சகோதரி 5 வருடமாக வயிறு வலியினால் மிகவும் வேதனைப்பட்டார். இவரை ஆலயத்திற்கு கொண்டு சென்று இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. தாவு புண்டேட் வெகில்கவ்படி**

லீலா என்ற சகோதரிக்கு 6 மாதமாக சரீரத்தில் கட்டி இருந்தது. இயேசுவை விசுவாசித்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. கிரண் அமளியார் காப்ரியா**

மீனா என்ற சகோதரி உதிரப்போக்கினால் மிகவும் வேதனைப்பட்டார். இவருக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலை கொடுத்தார்.

**Pr. தும்லா கார்ட் வால்பூர்**

குமாரியா என்ற சகோதரர் பக்கவாத வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டார். மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. வீர்சிங் பாபோர் காப்ரி**

பச்சுபாய் என்ற சகோதரன் ஒரு வருடமாக வியாதியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவரை ஆலயத்திற்கு கொண்டு வந்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

# பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்!

## இராஜஸ்தான் மாநிலம்

**Pr. லால்சிங் நினாமா — சகர்வாடா**

சோகன் என்ற சகோதரன் 15 நாட்களாக டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு கொண்டு வந்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. காந்திலால் கராசியா — பிலோடி**

வினோத் என்ற சகோதரனை பாம்பு கடித்துவிட்டது. இவரை ஆலயத்திற்கு அழைத்து கொண்டு போய் இவருக்காக ஜெபித்தபோது தேவன் விஷம் ஏறாமல் பாதுகாத்தார்.

**Pr. பார்த்தா டின்டோர் — போர்குண்டா**

ரசுடாமோர் என்ற சகோதரன் காய்ச்சலினால் முகத்தில் வீக்கம் ஏற்பட்டு கஷ்டப்பட்டார் இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

தேவலி என்ற சகோதரனுக்கு வயிறு வலி மற்றும் சரீர வலி இருந்தது. இவரை ஷாலோம் சபைக்கு கொண்டு வந்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. பாவ்ஜி கராசியா — குண்டா**

சம்சுபாய் என்ற சகோதரன் அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டார். இவரை மந்திரவாதியிடமும், மருத்துவமனைக்கும் கொண்டு சென்றும் பலனில்லாமல் இவருக்காக ஜெபிக்கும்படி வந்தார்கள். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைக் கொடுத்தார்.

**Pr. கல்லு டின்டோட் — தாட்கா**

அர்ப்பண் என்ற சிறுவன் டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் சுகம் கொடுத்தார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**Pr. மென்சிங் டாமோர் — மாண்ட்லி**

தேவா என்ற சகோதரி பிசாசின் பிடியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவருக்காக எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**Pr. விஜய் டாமோர் — குஜார்பாடா**

ஹீக்ளி என்ற சகோதரி வயிறு வலியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் சுகம் கொடுத்தார்.

**Pr. அபிஷேக் நினாமா — பிப்லிபாடா**

திவான் என்பவரின் மனைவி அசுத்த ஆவியினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

தன்னாபாய் என்ற சகோதரன் குஷ்டரோக வியாதியினால் பாதிக்கப்பட்டு காலில் உள்ள 2 விரல்களும் எடுக்கப்பட்டது. ஊழியர் இவருக்காக ஜெபித்தபோது தேவன் குஷ்டரோகத்தை நீக்கி விடுதலை கொடுத்தார்.

**Pr. பிரேம்சந்த் வாகுனியா — இட்டாவா**

கவிதா என்ற சகோதரி தலைசுற்றினால் மிகவும் பாதிக்கப்பட்டார். இவரை ஷாலோம் சபைக்கு கொண்டு வந்து இவருக்காக ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகம் கொடுத்தார்.

பாங்கலி என்ற சகோதரி இரவில் அசுத்த ஆவியினால் அலைகழிக்கப்பட்டார். இவருக்காக ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.



## ஷாலோம் கிராம ஆலயம்
# பாடி லசோடி
### இராஜஸ்தான்

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் பாடிலசோடி கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் மிகவும் வறுமையிலும், பாவத்திலும், விக்கிரக ஆராதனை செய்தும் வாழ்பவர்கள். இவர்கள் மத்தியில் பிறந்து வளர்ந்தவர்தான் **சகோ. தல்சிங் பாரியா.** இவர் ஒரு இரவு ஜெபக் கூட்டத்தில் பங்கு பெறும்படியாக இவரது சகோதரர் சகோ. பதமிலால் பாரியா அவர்கள் மூலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு தேவனுடைய வார்த்தையினால் தொடப்பட்டு இரட்சிப்பைப் பெற்று ஞானஸ்நானம் பெற்றார்.

பின்பு தானும் இயேசுவுக்காக ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சையினால், ஷாலோம் ஊழியத்தில் இணைந்து பாடி லசோடி என்ற கிராமத்தில் ஜெபக்கூட்டத்தினை ஆரம்பித்தார். பல்வேறு எதிர்ப்புகள் மற்றும் பிரச்சனைகள் மத்தியிலும் சபை நடைபெற்றது. பின்பு எதிர்ப்புகள் மாறி சபை வளர ஆரம்பித்தது. தற்போது 27 க்கும் அதிகமான குடும்பத்தார் பாடி லசோடி கிராமத்தில் தேவனை ஆராதித்து வருகிறார்கள். தற்போது தேவனுடைய மகிமைக்காக ஒரு ஆலயம் ரூ. 1 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு, **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க இந்த ஆலயத்திற்காக நிதிஉதவி கொடுத்த **திருமதி. சுகன்யா ஜோசப்** (பாளையங்கோட்டை) அவர்களால் 03–07–2014 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

---

## ஷாலோம் கிராம ஆலயம்
# அமளிப்பாடா
### இராஜஸ்தான்



இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் இந்த அமளிப்பாடா கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் பாவத்திற்கும், விக்கிரக ஆராதனைக்கும் அடிமையானவர்கள். இப்படியாக வாழ்ந்தவர்தான் **சகோ. பிரகாஷ் டாமோர்** அவருடைய குடும்பத்தில் அனைவருமே வியாதியின் பிடியில் சிக்கி மிகுந்த கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில்தான் சுதேச ஊழியர் **சகோ. அணில் சௌகான்** அவர்கள் இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி குடும்பத்தினரின் சுகத்திற்காக ஜெபித்தபோது தேவன் அனைவருக்கும் சுகத்தைக் கொடுத்தார்.

இந்த அற்புதத்தின் மூலம் குடும்பத்தார் அனைவரும் ஆண்டவராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். பின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்கிற பாரத்தினை தேவன் **சகோ. பிரகாஷ்** டாமோருக்குத் தந்தார். ஆகவே ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தன் சொந்த கிராமமாகிய அமளிப்பாடாவில் ஊழியத்தை ஆரம்பித்தார். தற்போது அந்த சபையில் 26 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். இங்கு தேவனுடைய நாம மகிமைக்காக **சகோ. ராஜா மான்சிங்** (திருநெல்வேலி) அவர்கள் மூலமாக அளிக்கப்பட்ட நிதி உதவி மூலம் ரூ. 1,20,000/– மதிப்பில் ஒரு கிராம ஆலயம் கட்டப்பட்டு, **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் 03–07–2014 அன்று பிரதிஷ்டை செய்தார்கள். **தேவனுக்கே மகிமை!**



ஷாலோம் கிராம ஆலயம்

## தன்புரி

இராஜஸ்தான்

தன்புரி என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் குசல்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் பாவத்திற்கும், விக்கிரக ஆராதனைக்கும் அடிமையானவர்கள். இப்படியாக பாவத்திலும் சாபத்திலும் வாழ்ந்தவர்தான் **சகோ. பாபுலால் பாபோர்.** இவருக்கு திருமணமான 3வது மாதத்தில் அவருடைய மனைவி மனநிலை சரியில்லாமல் போய்விட்டார். இந்த சூழ்நிலையில் சோட்டி முவாலாவில் கிராம சபை மூப்பர் ஒருவர் இவருக்கு இயேசுவை பற்றிக் கூறி சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு சபைப் போதகர் **சகோ. வஜ்ஹிங் வசுனியா** அவர்கள் இவரது மனைவிக்காக ஜெபிக்க தேவன் நல்ல சுகத்தினைக் கொடுத்தார். ஆகவே குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அதன் பின் ஊழியம் செய்ய வேண்டும் என்ற பாரம் ஏற்பட்டு ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஆராதனை நடத்த ஆரம்பித்தார். தற்போது இவரது சபையில் 40 குடும்பங்கள் ஆராதித்து வருகிறார்கள். **ஊழியர். பிரபுலால் பாபோர்** தன் சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்குத் தர முன் வந்தார். அந்த இடத்தில் தேவனுடைய மகிமைக்காக ஆலயம் ஒன்று கட்டப்பட்டு, **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க 12–07–2014 அன்று இந்த ஆலயத்திற்கு இயேசு விடுவிக்கிறார் மூலமாக நிதி உதவியளித்த **சகோ. ஜஸ்டஸ்,** (திருநேல்வேலி) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

---



ஷாலோம் கிராம ஆலயம்

## நெல்சூர்

இராஜஸ்தான்

நெல்சூர் என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்திலுள்ள கர்பாடா தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் பாவத்திலும், சாபத்திலும், சண்டையிடுவது, விக்கிரக ஆராதனை செய்வது என அந்தகாரத்தில் வாழ்ந்து வருகிறார்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த சகோதரர் **மகன் சங்காடா** என்பவர் பிசாசின் பிடியால் அவதிப்பட்டு மிகுந்த கஷ்டப்பட்டார். இதனால் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது. ஷாலோம் விசுவாசி மூலம் இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு, ஊழியர் மன்னு மெய்டா அவர்களிடம் ஜெபிக்கும்படி சென்றார். ஊழியர் அவர்களுக்காக ஜெபித்ததில் இவர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். அதினிமித்தம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் மகன் பாயின் வீட்டில் ஊழியத்தினை ஆரம்பித்தார்கள். தற்போது 30 குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறார்கள். பின்பு வீட்டில் இடப்பற்றாக்குறையால், மகன்பாய் அவர்கள் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்காக காணிக்கையாக கொடுத்த நிலத்தில் இயேசு விடுவிக்கிறார் மூலமாக **சகோ. ஜஸ்டஸ்** (திருநெல்வேலி) அவர்கள் கொடுத்த நிதி உதவியின் மூலம் ஒரு கிராம ஆலயம் கட்டப்பட்டு 13–07–2014 அன்று **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க **சகோ.ஜஸ்டஸ்** அவர்கள் மூலம் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள்.



ஷாலோம் கிராம ஆலயம்

# கோய்க்கா

இராஜஸ்தான்

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டம் சஜன்கட் தாலுகாவில் இந்த கோய்கா கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள மக்கள் சாராயம் மற்றும் இதர போதைப் பழக்கங்களுக்கு அடிமைகளாகவும், சண்டை போடும் பழக்கமுடையவர்களாகவும் இருந்தனர். இந்த சூழ்நிலையில் வளர்ந்த **சகோ. பாதர் பாரியா** அவர்கள் தாயார் மிகுந்த வியாதிப்படுக்கையில் இருந்தபோது எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் பலனில்லை. ஷாலோம் விசுவாசி ஒருவர் இயேசுவைப் பற்றிக் கூறி சபைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் ஜெபித்த போது இவரது தாயாருக்கு பரிபூரண சுகம் கிடைத்தது. **சகோ. பாதர் பாரியா** அவர்களுக்கும் சிறுநீரில் இரத்தம் கசியும். இதனால் அவரும் மிகுந்த கஷ்டப்பட்டார். அவரும் ஊழியரிடத்தில் ஜெபித்த போது தேவன் பூரண சுகத்தினைக் கொடுத்தார். இந்த அற்புதங்களின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத ஊழிய பயிற்சி பெற்று, தனது சொந்த கிராமமாகிய கோய்காவில் தனது வீட்டில் ஆராதனை நடத்த ஆரம்பித்தார். ஆரம்பத்தில் எதிர்ப்புகள் இருந்த போதிலும் ஜெபத்தின் மூலம், உபவாசத்தின் மூலம் மாறினது. தொடர்ந்து வீடுகள்தோறும் சென்று இயேசுவை பற்றி சுவிசேஷம் அறிவித்தார். இதன் மூலம் சபை வளர்ந்தது. தற்போது 63 குடும்பங்கள் சபையில் தேவனை ஆராதித்து வருகிறார்கள். இவர் தன்னுடைய ஊழியப் பாதையில் 60 ஊழியர்களை எழுப்பியுள்ளார். இராஜஸ்தானில் இந்த கோய்க்கா பணித்தளத்தை மையமாக வைத்து 100 கிராம சபைகள் வளர்ந்து வருகின்றன. மாதந்தோறும் அனைத்து ஊழியர்களுக்கும் குடும்ப கூடுகை வாலிபர்களுக்கான முகாம்கள், மூப்பர்களுக்கான முகாம்கள், ஜெப முகாம்கள், பெண்களுக்கான முகாம்கள் நடத்தும்படியாக இந்த கோய்க்கா கிராமத்தில் **The Holy Trinity Shalom Church** (ஷாலோம் பேராலயம்) 80 x 35 அளவில் சுமார் 25 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த பேராலயத்தினை 01–07–2014 அன்று தேவ நாமம் மகிமைக்காக **பேராயர். தேவதாஸ், பேராசியர். கிறிஸ்டோபர், சகோ. ஜோசப் தங்கசாமி** ஆகியோர் குடும்பமாக இணைந்து ஜெபித்து பிரதிஷ்டை செய்தனர்.

இந்த பேராலயம் **சகோ. ஜோசப் தங்கசாமி – லாவண்யா** (பாளையங்கோட்டை) அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதியுதவி ரூ. 10 இலட்சங்கள், துபாயைச் சேர்ந்த **சகோ. சாமுவேல் நடராஜன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுத்த நிதியுதவி ரூ. 7 இலட்சங்கள் மற்றும் நாலுமாவடி, **இயேசு விடுவிக்கிறார்** ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவி ரூ. 3 இலட்சங்கள் இவற்றின் மூலம் கட்டப்பட்டதாகும்.

# மகிமையின் மேல் மகிமைக் கண்டோம்

**Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்களின்
பணித்தள வருகை அனுபவங்கள்..

***கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,***

கிறிஸ்து இயேசுவின் நாமத்தினாலே உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேவனுடைய பெரிதானக் கிருபையினால் 23 ஆம் ஆண்டு ஷாலோம் ஸ்தோத்திர ஆராதனையில் பங்கு பெறவும், ஜுலை மாதம் 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை நமது ஷாலோம் பணித்தளங்களை பார்வையிடவும், கர்த்தருடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்ளவும் நானும் (**Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை) எனது மனைவி **திருமதி. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்களும், எனது மூத்த மருமகன் **சகோ. J. ஜோசப் தங்கசாமி** அவர்களும், மகள் **திருமதி. லாவண்யா ஜோசப்** அவர்களும், பேத்தி **J. பிரிசில்லா ஜோவன்னாவும்,** எனது இளையமகள் **திருமதி. சுகன்யா ஜோசப் எட்வர்ட்** அவர்களும், **பேரன் J. சாமுவேலும்** பார்வையிட தேவன் கிருபைச் செய்தார்.

01.07.2014 அன்று காலை நாங்கள் **பேராயர். தேவதாஸ்** அவர்களையும், அவர்கள் குடும்பத்தினரையும் மகிழ்ச்சியுடன் சந்திக்க கர்த்தர் கிருபை கூர்ந்தார். உடனே **பேராயர். தேவதாஸ்** அவர்களுடன் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஜாலின்புரா, சாசியா ஆகிய கிராம ஆலயங்களைப் பார்த்து ஊழியர்கள் குடும்பங்களையும் சந்திந்து அவர்களுக்காக ஜெபித்தோம். அதைத் தொடர்ந்து நாங்கள் குறிப்பாக **சகோதரர் J. ஜோசப் தங்கசாமி, சகோதரி. லாவண்யா ஜோசப்** அவர்கள் குடும்பத்தினர் முக்கிய பங்கு கொடுத்து கட்டிக் கொடுத்த கோய்க்கா பேராலயத்தின் பிரதிஷ்டை ஆராதனையில் குடும்பமாய் கலந்துக் கொள்ள தேவன் கிருபை செய்தார்.

**"என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன்"** (ஏசாயா 60:7) என்ற வாக்கின்படி கர்த்தருடைய மகிமையைக் காண கிருபை செய்தார். அதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் நான் ஜெபிக்கவும், **பேராயர் தேவதாஸ்** அவர்கள் மற்றும் **சகோ. J. ஜோசப் தங்கசாமி** அவர்களும் ஆக மூவரும் தேவநாம மகிமைக்காக ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தோம். வேதாகமத்தில் அன்று சாலொமோன் கட்டின தேவ ஆலயத்தில் தேவஜனங்கள் எல்லாரும் எவ்வாறு ஆனந்தமாக ஆடிப்பாடி உட்பிரவேசித்தார்களோ, அதைப் போல நமது ஊழியர்களும், விசுவாசிகளும் பேராலயத்தை பிரதிஷ்டை செய்து பிரவேசித்தது கண்கொள்ளாக் காட்சியாகும். துதி ஆராதனை வேளையில் தேவனுடைய பிரசன்னம் அளவில்லாமல் இறங்கியது. பின்பு என் மனைவி **டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர், சகோ. J. ஜோசப் தங்கசாமி, சகோதரி. லாவண்யா ஜோசப், சகோதரி. சுகன்யா ஜோசப் எட்வர்ட்** ஆகியோர் தேவ வசனங்கள் மூலம் வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின்பு **பேரன் J. சாமுவேல்** மற்றும் **பேத்தி J. பிரிசில்லா ஜோவன்னா** இருவரும் வேத வசனங்களை மனப்பாடமாக சொன்னார்கள். அதன்பின் கர்த்தர் என் மூலம் **"விதைகளை அளித்து, அதை பெருகப்பண்ணி, உங்கள்**

**நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்"** (2 கொரி. 9:8) என்று வாக்கை அளித்து, **"ஆயிரமடங்காக பெருகப் பண்ணுவேன்"** (உபா 1:11) என்று ஆசீர்வதித்தார். என் முன்னாள் மாணவர் **சகோ. கேரட்** அவர்கள் மொழி பெயர்த்தது என்னை மிகவும் உற்சாகப்படுத்தியது. பேராலயப் பிரதிஷ்டை எங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய மகிமையைக் காணவும், அவரை மகிமைப்படுத்தவும், நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சியாயிருந்தது. அது கர்த்தரின் ஆசீர்வாதமாய் இருந்தது.

**02.07.2014** அன்று குஜராத்திலுள்ள ஜெரி Project-டையும் மத்தியப்பிரதேசம், அந்தர்வேலியாவிலுள்ள Compassion Project-யையும் பார்வையிட்டோம். கர்த்தர் அவர்களுக்கு தந்த தாலந்தை நன்கு பயன்படுத்தி கைத்தொழிலில் அநேக பொருட்களை தயாரிப்பதின் மூலம் அவர்கள் வாழ்க்கை உயர்வை காணவும் தேவன் கிருபை செய்தார். பின்பு குஜராத்திலுள்ள தாகோத்தில் மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கென்று நடைப்பெற்ற 23 ஆம் வருட ஸ்தோத்திர கூடுகையில் பங்குபெற்றோம். அங்கு எங்கள் அனைவருக்கும் அவர்கள் கலாச்சார முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கே கர்த்தர் என் மூலம் தேவ வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள கிருபை கொடுத்தார். அனைவரும் தேவ வார்த்தையால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

அதேநாளில் தாகோத்திலுள்ள நமது ஷாலோம் மிஷன் மருத்துவமனையில் வைத்து இலவச மருத்துவமுகாம் நடைபெற்றது. அதில் **டாக்டர். இன்பக்குமார்** அவர்களும், **டாக்டர். பிரேமா கிறிஸ்டோபர்** அவர்களும் அம்முகாமிற்கு வந்திருந்த 270 வெளி நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தனர்.

**03.07.2014** அன்று இராஜஸ்தானிலுள்ள அம்பளிபாடா மற்றும் பாடிலசோடி கிராம ஆலயப்பிரதிஷ்டை நடைபெற்றது. இந்த ஆராதனைகளில் **பேராயர். தேவதாஸ்** அவர்களுக்கு, அடியேனுடைய குடும்பத்தினருக்கு பீல் ஆதிவாசி கலாச்சாரத்தின்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. அம்பளிப்பாடா கிராம ஆலயத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்களும், நானும், பாடிலசோடி கிராம ஆலயத்தை **சகோதரி. சுகன்யா ஜோசப் எட்வர்ட்** அவர்களும் தேவநாம மகிமைக்காக கர்த்தர் பிரதிஷ்டைச் செய்ய வைத்தார். இந்த பிரதிஷ்டை ஆராதனைகளில் கர்த்தர் அடியேன் மூலம் தேவசெய்தியைக் கொடுத்தார். அனைவருக்கும் அவை ஆசீர்வாதமாயிருந்தன. **தேவனுக்கே மகிமை.** இந்த மூன்றுநாள் பணித்தள ஊழியங்கள் பரலோகத்தின் ஒரு சிறு பகுதியை ருசிக்க வைத்தது. கர்த்தருக்க ஸ்தோத்திரம்.

இப்பணித்தள ஊழியங்களை எங்களுக்கு தந்த தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இதை ஆயத்தப்படுத்தி அனைத்தையும் செம்மையாய் நடக்க உதவிய **பேராயர். தேவதாஸ்** அவர்களுக்கும், அவருடைய மனைவி **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும், ஊழியர்களுக்கும், பணிவிடையாளர்களுக்கும், ஜெபித்த மக்களுக்கும் எங்கள் நன்றியை செலுத்துகிறோம். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. **கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.**

**Prof. C.S. கிறிஸ்டோபர்,**
பாளையங்கோட்டை

# ஹெல்சூர் (குஜராத்) கிராம ஆலய பிரதிஷ்டை


ஆலயத்திற்கு முன்பு விசுவாசிகளுடன்


ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் சகோ. ஜஸ்டஸ் அவர்கள்


தேவ செய்தியளிக்கும் சகோ. ஜாண் டேவிட் அவர்கள்


கூடியிருந்த விசுவாசிகள்

# தன்புரி (இராஜஸ்தான்) கிராம ஆலய பிரதிஷ்டை


ஆலயத்திற்கு முன்பு விசுவாசிகளுடன்


கலாச்சார வரவேற்பின் போது


ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும் சகோ. ஜஸ்டஸ் அவர்கள்


வாழ்த்துச் செய்தியளிக்கும் சகோ. ஜஸ்டஸ் அவர்கள்

# Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் குடும்பத்தாரின் பணித்தள வருகை




கோய்க்கா ஷாலோம் பேராலயம் பிரதிஷ்டையில் கலாச்சார வரவேற்பு



கோய்க்கா ஷாலோம் பேராலயம் பிரதிஷ்டையில் ஜெபவேளையை ஏறெடுக்கும் பிஷப் தேவதாஸ் அவர்கள்



கோய்க்கா ஷாலோம் பேராலயம் பிரதிஷ்டையில் தேவ செய்தியளிக்கும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



கலாச்சார வரவேற்பு



வாழ்த்துரை வழங்கும் Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்கள்



பாடிலசோடி கிராம ஆலயத்திற்கு முன்பு

## Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்கள் மூலம் நமது ஷாலோம் பணித்தளத்தில் நடத்தப்பட்ட மருத்தவ முகாம்



மருத்துவ முகமாமிற்கான சிறப்பு ஜெபம்



நோயாளிகளை பரிசோதிக்கும் Dr. பிரேமா கிறிஸ்டோபர் அவர்கள்



சிகிட்சைக்காகக் காத்திருக்கும் நோயாளிகள்

# அம்ளிபாடா (இராஜஸ்தான்) கிராம ஆலய பிரதிஷ்டை


விசுவாசிகளுடன்


ஆலயத்தை பிரதிஷ்டை செய்யும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்


தேவ செய்தியளிக்கும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்

# பாடிலசோடி கிராம ஆலய பிரதிஷ்டை


விசுவாசிகளுடன்


ஆலயத்தை பிரதிஷ்டை செய்யும் திருமதி சுகன்யா அவர்கள்


வாழ்த்துரை வழங்கும் திருமதி. சுகன்யா அவர்கள்

# Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்களின் பணித்தள வருகையின்போது நடைபெற்ற இட்டாலா கிராம ஆலயபிரதிஷ்டை


விசுவாசிகளுடன் ஆலயத்தின் முன்பு


பிரதிஷ்டை செய்யும் Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்


தேவனை ஆராதிக்கும் விசுவாசிகள்

## சகோ. ஸ்டீபன் (குளத்துக்குடியிருப்பு) அவர்களின் பணித்தள வருகை


படுவேல் (இராஜஸ்தான்) கிராம ஆலயத்திற்கு முன்பு


படுவேல் கிராம ஆலய பிரதிஷ்டை ஜெபம்


தேவ செய்தியளிக்கும் சகோ. ஸ்டீபன் அவர்கள்

## குஜராத், இராஜஸ்தாஸ்தான் மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டங்களில் சகோ. ஜீவி ஜெபராஜ் (சென்னை) அவர்கள்


கலாச்சார வரவேற்பு


தேவ செய்தியளிக்கும் சகோ. ஜீவி ஜெபராஜ்


கூடியிருந்த தேவ ஜனங்களில் ஒரு பகுதி

## சகோ. ஜஸ்டஸ் (திருநெல்வேலி) அவர்களின் பணித்தள வருகை


ஹிரோலா (குஜராத்) கிராம ஆலயத்தில் விசுவாசிகளுடன்


நவாபாடா (ம.பி.) கிராம சபை ஆராதனையில்


பிஜல்பூர் (இராஜஸ்தான்) விடுதி மாணவர்களுடன்

ஷாலோம் கிராம ஆலயம்

# இட்டாலா (புரியா)

இராஜஸ்தான்



இட்டாலா (புரியா) கிராமம் இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டதில் குசல்ட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த ஜனங்கள் பீடி, சாராயம் குடிப்பது, தம்பாக்கு போடுவது போன்ற தீய பழங்கங்களுடன் விக்கிரகங்களை வணங்குகிறவர்களாகவும் வாழ்ந்துவந்தனர். இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் **சகோ. மஹிபால் ஜாதுவா.** இவரது தந்தை மந்திர தொழில் செய்பவர். அதினிமித்தம் வீட்டில் பிசாசின் போராட்டம் அதிகமாக இருந்ததினால் இவரது வீட்டில் அனைவரும் வியாதியினால் கஷ்டப்பட்டார்கள். இதனால் ஒரு ஷாலோம் ஊழியரிடம் ஜெபிக்கும்படி சென்றனர். அவர் இவர்களுக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியிலிருந்தும் வியாதியிலிருந்தும் விடுதலை கொடுத்தார். இந்த அற்புதத்தினை பெற்றுக் கொண்ட இவர்கள் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர்.

அதன்பின் **சகோ. மஹிபால் ஜாதுவா** அவர்களுக்கு ஊழியம் செய்யும்படியான பாரத்தினை தேவன் கொடுத்தார். ஆகவே ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தனது சொந்த கிராமத்தை மையமாக வைத்து ஊழியத்தினை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் எதிர்ப்புகள் இருந்தாலும் தேவன் அவற்றை நீக்கினார். தற்போது 30க்கும் அதிகமான குடும்பத்தார் இங்கு ஞாயிறுதோறும் தேவனை ஆராதனை செய்கின்றனர். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்த ஊழியர் தமது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தரவே அந்த இடத்தில் அழகிய கிராம ஆலயம் கட்டப்பட்டு, ஷாலோம் பேராயர் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் ஜெபிக்க **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள்.

இந்த கிராம ஆலயம் பாளையங்கோட்டையைச் சேர்ந்த **சகோ. S.P.M. மனோகர்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

## *ஆலயங்களை கட்டுவோம் வாருங்கள்*

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

நமது ஷாலோம் பணித்தளங்களில் இந்த 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும்படியாக தேவன் தந்த திட்டத்தினை ஜெபித்து செயல்படுத்தி வருகிறோம். இதில் தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 31 ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 22 கிராம ஆலயங்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளோம். இன்னும் கட்டப்பட்டு வரும் மீதி 9 ஆலயங்களுக்கும் இன்னும் கட்டப்பட வேண்டிய 69 ஆலயங்களுக்கும் **ரூ. 2 இலட்சங்கள், ரூ. 1 இலட்சம், ரூ. 50,000/– ரூ. 20,000/– ரூ. 10,000/–** என கொடுத்து இந்த மாபெரும் தரிசனப் பணியினை தாங்கக் கூடிய ஆதரவாளர்கள் கிடைக்க ஜெபியுங்கள். கர்த்தர் ஏவினால் உங்களது உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்புங்கள். மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்து இந்த மாபெரும் பணியைத் தாங்குங்கள்.

## **சகோ.ஸ்டீபன்** (குளத்துக்குடியிருப்பு) மற்றும் **சகோ. ஜீவி ஜெபராஜ்** (சென்னை) ஆகியோரின் **பணித்தள வருகை**

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த ஜுலை மாதம் 7–ம் தேதி முதல் 9–ம் தேதி வரை **சகோ.ஸ்டீபன்** (குளத்துக்குடியிருப்பு) மற்றும் **சகோ. ஜீவி ஜெபராஜ்** (சென்னை) அவர்கள் நமது பணித்தளத்தை பார்வையிடும்படி வருகை தந்திருந்தார்கள். 07–07–2014 அன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் குஜராத்திலுள்ள தெல்சர், வரம்கேடா ஆகிய சபைகளையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்தார்கள். அதைத் தொடர்ந்து குஜராத் கங்கேலா சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மூப்பர்கள் கூடுகையில் கலந்து கொண்டு, மூப்பர்களுக்கு வாழ்த்துதலையும், தனது அனுபவ சாட்சியையும் பகிர்ந்து கொண்டார்கள். தொடர்ந்து **சகோ. ஜீவி ஜெபராஜ்** தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் தேவ வார்த்தையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். மறுநாள் 08–07–2014 அன்று மத்தியபிரதேசத்திலுள்ள ரூப்பாகேடா, நவாப்பாடா ஆகிய பணித்தளங்களையும், சபை மற்றும் ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்தார்கள். அதைத் தொடர்ந்து காளாகேத் சபையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மூப்பர்கள் கூடுகையில் கலந்து கொண்டு வாழ்த்துதலோடு தனது சாட்சியையும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. ஜீவி** அவர்கள் செய்தியளித்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது.

09–07–2014 அன்று **சகோ. ஸ்டீபன்** அவர்கள் இராஜஸ்தானில் உள்ள படுவேல் கிராம ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். அங்கு கூடியிருந்த சபை விசுவாசிகளுக்கு வாழ்த்துதலோடு, தேவ செய்தியையும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. கேரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். கலந்து கொண்ட அனைவரும் செய்தியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதே நாளில் **சகோ. ஜீவி ஜெபராஜ்** அவர்கள் கோய்கா பேராலயத்தில் நடைபெற்ற மூப்பர்கள் கூட்டத்திலும் கலந்து கொண்டு தேவ செய்தியளித்தார்கள். **சகோ. ஸ்டீபன்** அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துச் செய்தி கூறினார்கள். மூப்பர்கள் தங்கள் சபையின் வளர்ச்சிக்காகவும் ஆத்தும இரட்சிப்பிற்காகவும் பாரத்தோடு ஜெபிப்பதை பார்த்து கர்த்தரை துதித்தார்கள்.

**ஊழியம் மற்றும் பணித்தளம் பற்றிய கருத்துக்கள்**

தேவன் இந்த பீல் ஆதிவாசி மக்களை நேசிப்பது போல இவர்களும் ஆண்டவரை அதிகமாக நேசிப்பதை பார்க்க முடிந்தது. அவர்கள் ஆடிப்பாடி தேவனைஆராதிக்கும் ஆராதனை மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நேரத்தைக் கூட பொருட்டாக எண்ணாமல் கர்த்தருடைய சமுகத்தில் தேவனுடைய வார்த்தைக்காக ஜனங்கள் ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். அவர்கள் தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசம் நம்மை வியக்க வைக்கிறது. நிச்சயமாக இந்த பணித்தள பார்வை ஆசீர்வாதமாக இருந்தது. தொடர்ந்து பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம். **தேவனுக்கே மகிமை!**

## **சகோ. ஜஸ்டஸ்** (திருநெல்வேலி) மற்றும் **சகோ. ஜாண் டேவிட்** (சென்னை) ஆகியோரின் **பணித்தள வருகை**

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த ஜுலை மாதம் 12 மற்றும் 13–ம் தேதிகளில் சகோ.ஜஸ்டஸ்(திருநெல்வேலி) மற்றும் **சகோ. ஜான் டேவிட்** (சென்னை) அவர்கள் நமது ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிட வருகை தந்திருந்தார்கள். 12–ம் தேதி காலை **சகோ. சாமுவேல்** அவர்களுடன் குஜராத் மாநிலத்திலுள்ள பாரேவா, ஹிரோலா ஆகிய ஆலயங்களை பார்வையிட்டு போதகரின் குடும்பத்தையும் சந்தித்தார்கள். குறிப்பாக ஹிரோலா கிராமத்தில் நடைபெறும் நமது Compassion Project –ல் நமது பீல் ஆதி வாசி பிள்ளைகளுக்கு எவ்வாறு கல்வி மற்றும் சுகாரத்தில் முன்னேற்றுவிக்கிறோம் என்பதை பார்வையிட்டார்கள். அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள கும்புரா சபை மற்றும் போதகர் குடும்பம், கோய்கா பேராலயம் மற்றும் போதகரின் குடும்பத்தை சந்தித்து, அங்கு நடக்கும் ஊழியங்களைப் பற்றி தெரிந்து கொண்டார்கள். கர்த்தர் இராஜஸ்தான் மாநிலத்தில் எவ்வளவு வல்லமையாக கிரியை செய்வதையறிந்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அதைத் தொடர்ந்து தன்புரி என்ற கிராம ஆலயப் பிரதிஷ்டையில் கலந்து கொண்டு ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். தொடர்ந்து நடைபெற்ற பிரதிஷ்டை ஆராதனையில் **சகோ. ஜஸ்டஸ்** அவர்கள் வாழ்த்துச் செய்தியைக் கூறினார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. ஜான் டேவிட்** அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. கேரட்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அங்கு ஆலயம் நிரம்பி வழியும் அளவிற்கு விசுவாசிகள் கூடியிருந்தனர். பிரதிஷ்டை ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது. அதைத் தொடர்ந்து நமது ஷாலோம் நடுநிலை பள்ளியையும், மாணவர்களையும், மாணவர் தங்கும் விடுதியையும் பார்வையிட்டார்கள். முதல் நாள் பணித்தளப்பார்வை ஆசீர்வாதமாக இருந்தது. 2–ம் நாள் 13–07–2014 அன்று மத்தியபிரதேசத்திலுள்ள ரூப்பகேடா மற்றும் காளாகேத், நவப்பாடா ஆகிய கிராம சபைகளில் நடக்கும் ஞாயிறு ஆராதனையை பார்வையிட்டு, கலந்து கொண்ட விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் கூறினார்கள்.

அதைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்தில் கர்பாடா தாலுகாவில் நெல்சூர் கிராம ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்டுள்ள கிராம ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தார்கள். அங்கு ஆலயம் நிரம்பி வழிய கூடியிருந்த விசுவாசிகளுக்கு வாழ்த்துச் செய்தியளித்தார்கள். தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தையை **சகோ. ஜான் டேவிட்** பகிர்ந்து கொள்ள சகோதரி.வஹிதா தேவதாஸ் அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஆலய பிரதிஷ்டையில் பங்கு பெற்ற அனைவரும் ஆசீர்வாதத்துடன் சென்றார்கள். இத்துடன் 2–ம் நாள் பணித்தளப்பார்வை நிறைவடைந்தது.

**சகோ.ஜஸ்டஸ் அவர்கள் பகிர்ந்த பணித்தளம் பற்றிய கருத்துக்கள்:**

உண்மையிலேயே பீல் ஆதிவாசி மக்களை தேவன் நேசிக்கிறார். அவர்கள் ஆராதிக்கும் ஆராதனையை பார்க்கும் போது பரலோகமே இறங்கி வந்தது போல் இருந்தது. எத்தனையோ இடங்களில் ஆராதனையை பார்த்திருந்தாலும் இவர்கள் ஆராதனை செய்வது விசேஷமாயிருக்கிறது. அவர்கள் வசனத்தின்படி தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறார்கள். அவர்கள் தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசம் பெரியது. வேத வசனத்தை அப்படியே சந்தேகப்படாமல் விசுவாசிக்கிறார்கள்.

நான் வட இந்திய மிஷனெரி பணித்தளத்திற்கு இது தான் முதல் முறையாக வருகிறேன். நான் கட்டி கொடுத்த ஆலயங்களை பிரதிஷ்டை செய்ய வந்தேன் என்று சொல்வதை விட இங்கு நடக்கும் ஊழியங்கள் மற்றும் இந்த பீல் ஆதிவாசி மக்கள் பற்றி அறிந்து கொள்ளத்தான் வாஞ்சையாய் பணித்தளத்திற்கு வந்தேன். இங்கு பார்க்கும் போது தான் தெரிய வருகிறது மாதந்தோறும் 1 ஆலயமாவது கட்டிக் கொடுக்க வேண்டும் என்று என் உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டேன்.

இந்த மக்களை பார்க்கும் போது இவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் ஆனால் பொருளாதாரத்தில் இவர்கள் இன்னும் முன்னேற்றமடைய வேண்டும் என நான் ஜெபிக்கிறேன். நம் வாழும் தென் பகுதியில் மிஷனெரிகள் வந்த காரணத்தினால் தான் நாம் இவ்வளவு பொருளாதாரத்தில் முன்னேறியிருக்கிறோம்.

அதேப் போல் இந்த மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்படுவதற்கும் நாமும் நம்மால் முடிந்த வரை ஏதாவது ஒரு பங்கை கொடுத்து உதவ வேண்டும் என்பதை உணர்ந்தேன். இந்த பணித்தளம் தேவைகள் நிறைந்த பணித்தளம் என்பதை நான் உணர்ந்தேன். உண்மையாக ஷாலோம் ஊழியம் தேவன் தந்த தரிசனத்தை நிறைவேற்றி வருகிறது. நிச்சயமாக இந்த முழு பீல் ஆதிவாசி மக்களும் தேவனண்டை வருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## *முகவரி மாற்றங்களைத் தெரியப்படுத்துங்கள்*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம். இது நாங்கள் உங்களுடன் சரியாகத் தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும்.

மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குக் கிடைத்தவுடன் உங்களுக்கு SMS மூலம் செய்தி தெரிவிக்கப்படும்.

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்

## பாளையங்கோட்டை NGO B காலனி CSI ஆலயம் (22.06.2014)

தேவனுக்கே மகிமை உண்டாவதாக! தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 22.06.2014 அன்று பாளையங்கோட்டை N.G.O. 'B' காலனியிலுள்ள CSI. தூய பேதுரு தேவாலயத்தில் நடைபெற்ற காலை ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர்களின் பிரதிஷ்டை நடைபெற்றது.

இந்த ஆராதனையில் இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலிருந்து வந்திருந்த நான்கு பீல் சுதேச ஊழியர்கள் **Rev. பன்னன் சாலமோன்** அவர்கள் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். ஊழியர்கள் தங்கள் அனுபவ சாட்சிகளை பகிர்ந்து கொள்ள **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் மொழிபெயர்த்ததுடன் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த ஆராதனையில் **Rev. ஸ்டீபன்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையை **Prof. C.S. கிறிஸ்டோபர்** அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். சபை போதகர், சபை அங்கத்தினர்கள் மற்றும் ஊழியர்களைத் தாங்க முன்வந்த ஆராதரவாளர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

### *பிரதிஷ்டை செய்யப்பட்ட ஊழியர்களின் விபரம்*

1. **சகோ. ஜித்மால் பட்டேல்,** தால்புரா, இராஜஸ்தான்
2. **சகோ. அமர்சிங் ரட்டுவா,** பாட்கேடா, மத்தியப்பிரதேசம்
3. **சகோ. ருமியேல் D. ரனா,** வாக்கனீர் ராமாபளா, இராஜஸ்தான்
4. **சகோ. மகேஷ் R. பார்மர்,** ஜாலேட், குஜராத்

## ஒண்டிப்புதூர் CSI ஆலயம் (28.06.2014)

தேவனுக்கே மகிமை உண்டாவதாக! தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 28.06.2014 அன்று ஒண்டிப்புதூர் CSI ஆலயத்தில் நடைபெற்ற உபவாசக் கூடுகையில் வைத்து **போக்குவரத்து பணியாளர் ஜெப ஐக்கியத்தின்** சார்பில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. பரம்சிங் பாபோர்** (சரக்காணி, இராஜஸ்தான்) அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

சுதேச ஊழியரைத் தாங்க **முன்வந்த போக்குவரத்து பணியாளர் ஜெப ஐக்கியத்தாருக்காகவும், சகோ. ஜோசப்** அவர்கள் குடும்பத்தினருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

***"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"... மத்தேயு 10 : 42***

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **ஆசீர்வாத் K. சங்காடா**

தந்தையின் பெயர் : காலு சங்காடா

தாயாரின் பெயர் : மஞ்சுளா சங்காடா

பிறந்த நாள் : 22.03.2002

படிக்கும் வகுப்பு : 5 th Std.

சொந்த ஊர் : பாரேவா

மாவட்டம் & மாநிலம் : தாகோத், குஜராத்

மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:—இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன் இறந்த ஆவிகளையும், விக்கிரகங்களையும் வணங்கி வந்தார். கெட்ட பழக்கங்கள் உடையவராகவும் இருந்தார். 7—ம் வகுப்பு படித்த நேரத்தில் கால் வலி ஏற்பட்டு நடக்க முடியாமல், பள்ளிக்கு செல்ல முடியாமல் இருந்தார். இந்நிலையில் இவரது சித்தப்பா நூர்ஜி பாய் ஜாலோத்தில் நடைபெற்ற வெள்ளிக் கிழமை ஷாலோம் சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த கூட்டத்தில் இவருக்காக ஜெபித்த போது, கால்களில் பூரண சுகத்தைப் பெற்றார். அந்த நாளில் இயேசுவை ஏற்றுக் கொண்டார். பின்பு ஞாயிறு தோறும் பாரேவா சபையில் நடைபெற்றஆராதனையில் பங்கு பெற்றார். அதன் பின் 10—ம் வகுப்பு முடித்த பிறகு, ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, பக்கத்து கிராமமாகிய ரேட்டியாவில் ஊழியம் செய்து வருகிறார். கிராம சபையில் 35 குடும்பத்தாரும் தேவனை ஆராதித்து வருகிறார்கள்.

மாணவனைக் குறித்து :— ஆசீர்வாத் நன்றாக படிப்பான். கிரிக்கெட் விளையாடுவது பிடிக்கும். இவனுக்கு 1 சகோதரி உண்டு.

ஜெபியுங்கள் :— இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

மாணவனைத் தாங்குபவர் :— **Mr. R. Immanuel Sekar**, Chennai.

### ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்

பிரியமானவர்களே! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/— கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 1056 மாணவர்களில் இன்னும் 252 **மாணவ மாணவியர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்திவையுங்கள்.

# ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**M/S. SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

Shalom Chennai Branch Office,
**Bro. John Jeyasingh**
No.102-2nd Main Road
Sathya Nagar, Padi,
CHENNAI - 600050.
Cell : 9698244577

**MARTHANDAM BRANCH OFFICE**

**Bro. Selvadurai.G**
Bethel,
25-7/A 1-Block 25, Paruthivilai,
Kannakode, Marthandam - 629165
Cell : 9487689869

**MUMBAI BRANCH OFFICE**

**Bro. Prabhakaran. P.**
C/O P.Immanuel,
C-2, Plot No.123-Old Mhada Colony,
Mangalya Co.Op.Society Ltd,
Pokharan Road No.2,
Thane West - 400610
Cell : 9768282699

**NAGERCOIL BRANCH OFFICE**

**Bro. John Sridhar**
SHARING LOVE MISSION Branch
6B1/A-Isaac Street,
Nagercoil - 629001
Cll : 9698844511

**MADURAI BRANCH OFFICE**

**Bro. Chandra Paul. S**
6/3, Nellaiappar Puram 7th Street,
Tirunagar (p.o)
MADURAI-625006
Cell : 9382955663

**TIRUNELVELI BRANCH OFFICE**

**Bro. David. R**
56 A/4,-C.S.I Church South Street,
(Upstairs) STC road,
Perumalpuram, Palayamkottai
TIRUNELVELI-627007
Cell 9698844599

## முக்கிய அறிவிப்பு



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

நமது ஷாலோம் ஊழியத்தில் பத்திரிகை மற்றும் முன்னேற்றப் பணிகளில் கடந்த ஒரு ஆண்டு காலமாக ஊழியம் செய்து வந்த **சகோ. சந்திரக் குமார்** அவர்கள் நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து கடந்த ஜுன் 1ம் தேதி முதல் விலகிக் கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே ஷாலோம் ஊழியத்தின் தொடர்பாக காணிக்கை கொடுக்கவோ மற்ற எந்த காரியங்களுக்காகவோ அவருடன் தொடர்பு கொள்ள வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ஷாலோம் மிஷனெரி ஊழியப் பிரதிநிதிகள்

**சென்னை முன்னேற்ற பணியாளர்கள்**

| | |
|---|---|
| Bro. M. ஜான் ஜெயசிங் | 9698244577 |
| Bro. R/ ஜான் ஸ்டேன்லி | 9698244599 |

**சென்னை பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Bro. அலெக்ஸ் சுந்தர்ராஜ் | 9150544414 |
| Sis. பபினா ப்ராக்ளின் | 9952960812 |
| Bro. பூபதி | 8939298529 |
| Sis. சந்திரா ஜோயல் | 9840589175 |
| Bro. சார்லஸ் ஜெகநாதன் | |
| Bro. S. சின்னத்துரை | 9941956016 |
| Sis. கிறிஸ்டினா பிரின்ஸ் | 9444470940 |
| Bro. A. டக்ளஸ் அன்ட்ரூ | 9444202215 |
| Bro. R. இம்மானுவேல் சேகர் | 9600179349 |
| Bro. கிருபாகரன் | 9444084355 |
| Bro. லாரன்ஸ் | 9710247017 |
| Sis. மனோரஞ்சிதம் வில்பர்ட் | 9884286673 |
| Bro. T. முத்துராஜ் | 7305272193 |
| Bro. S. பால்துரை | 9444899908 |
| Bro. M. சாமுவேல் | 9840386120 |
| Bro. R. லெஸ்லி ரிச்சர்ட் | 9008400424 |

**தூத்துக்குடி ஊழியர்கள்**

| | |
|---|---|
| Bro. J. அற்புதராஜ் மர்காஷிஸ் | 9486222012 |
| Bro. Y. பிரேம்குமார் | 9444023588 |
| Bro. S. சாம் குணசீலன் | 9345675468 |
| Bro. J. ஜாண்சன் ஜெபராஜ் | 9362617374 |
| Bro. J. ரதீஸ்குமார் | 9698244533 |
| Bro. S. ஆலன் எல்விஸ் | 9698844522 |
| Bro. S. ஜெயபிரகாஷ் | 9698844533 |
| Bro. D. சாமுவேல்ராஜ் | 9994646704 |
| Bro. R. சுந்தர்சிங் | 9486983912 |
| Sis. E. எபனேசர் டேவிட் | 0461-2375468 |
| Sis. J. கீதா எடிங்டன் | 0461-2375468 |
| Sis. J. ஆக்கிலா எஸ்தர் | 0461-2375468 |
| Sis. S. பெர்சியா பால் | 0461-2375468 |
| Sis. M. ஹெப்சிபா | 0461-2375468 |
| Sis. G. புஷ்பரத்தினம் ஜெபா | 0461-2375468 |
| Sis. S. ஜெபராணி மில்டன் | 0461-2375468 |
| Sis. J. கோகிலா | 0461-2375468 |
| Sis. V. ஹெலன் ரதி | 0461-2375468 |
| Sis. M. மரிய நான்சி | 0461-2375468 |
| Sis. P. லதா | 0461-2375468 |

**தூத்துக்குடி மாவட்ட பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Sis. S. அனியம்மாள் | 9629849308 |
| Sis. J. அனுசியா | 9788854965 |
| Bro. பாலசிங் | 9894121797 |
| Bro. C. பாஸ்கர் | 9994025696 |
| Bro. V. காட்வின் | 9443344754 |
| Bro. T. இன்னசென்ட் | 9942695514 |
| Sis. ஜீலியட் கோயில்பிச்சை | 9894723162 |
| Sis. S. லிடியா ஜெம்சிங் | 9500487496 |
| Bro. M. முத்து | 9894685538 |
| Sis. நிர்மலா பெஃலிக்ஸ்சன் | 9524540999 |
| Bro. S. ராஜகனி | 9842217738 |
| Bro. H. ராஜமாணிக்கம் | 9566693121 |
| Bro. Y. ராஜன் | 9443751027 |
| Bro. ராஜாசிங் | 9943476290 |
| Bro. S. சேகரன் | 9944210217 |
| Sis. G. செல்வசீலி | 9442834877 |
| Bro. S. செல்வராஜ் | 7598566171 |
| Sis. சாந்தி லிவிங்ஸ்டன் | 9566892697 |

| | |
|---|---|
| Bro. E. சுபாஷ் | 9790309025 |
| Bro. I. தாமஸ் | 9842509223 |
| Bro. வாலட்டின் ஜாண் | 9042428622 |
| Sis. ஜெனிபர் | 9442868557 |
| Bro. D. குணசிங் | 9442949151 |

**திருநெல்வேலி முன்னேற்றபணியாளர்**

| | |
|---|---|
| Bro. R. டேவிட் | 9698844599 |

**திருநெல்வேலி பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Sis. எஸ்தர் ஜேசன் | 9843620270 |
| Sis. லிடியா ஜாண் | 9894650914 |
| Bro. G. பிச்சை ஜெபராஜ் | 9442063622 |
| Sis. K. ரேவதி சசிகுமார் | 9790504325 |

**மார்த்தாண்டம் முன்னேற்ற பணியாளர்**

| | |
|---|---|
| Bro. G. செல்வத்துரை | 9487689869 |

**மார்த்தாண்டம் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Bro. P. சார்லஸ் | 4651273112 |
| Bro. P. ஜெரி டேவிட் | 9487127954 |
| Bro. L. கிங்பர்ட் | 9486864820 |

**நாகர்கோவில் முன்னேற்ற பணியாளர்**

| | |
|---|---|
| Bro. R. ஜாண் ஸ்ரீதர் | 9698844511 |

**கன்னியாகுமரி மாவட்டம் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Bro. K. ஏபேல் | 9789646021 |
| Bro. N. ஜாண்சன் | 9486797772 |
| Bro. A. கிஸ்லட் | 9486646379 |
| Bro. P. லிபின் தம்பி | 9047545031 |
| Sis. M. ரோஸ்மேரி | 9488336467 |
| Sis. Y. கீதா கோபி (குலசேகரம்) | 9486943009 |
| Bro. A. ஜாண் விக்டர் (குழித்துறை) | 04651261116 |
| Bro. P. டேவிட் பிரைட்சிங் (நல்லூர்) | 9442655321 |
| Bro. ஃப்ரோபல் கிஃப்டி (பாகோட்) | 9443607680 |
| Bro. P. ஜார்ஜ் (பாகோட்) | 9894478405 |
| Bro. S.M. ஜெபர்சன் (பாகோட்) | 9443593153 |
| Sis. T.C வசந்தாகுமாரி (பாகோட்) | 8903928696 |
| Sis. G. வசந்தா செல்வராஜ் (புத்தலம்) | 9442830014 |
| Bro. P. கிறிஸ்டோபர் (திருவாட்டார்) | 9787958155 |

**மதுரை பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Bro. S. சந்திரபால் | 9382955663 |
| Sis. M. ரூபி பிரபாவதி | 9940753581 |

**ராஜபாளையம் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| மக்னாயிம் ஜெபக்குழு (Bro. இம்மானுவேல்) | 9364114373 |

**சிவகாசி பிரதிநிதி**

| | |
|---|---|
| Bro. எபனேசர் ராஜேந்திரன் (Ebi Bible Centre) | 9443320519 |

**கும்பகோணம் பிரதிநிதி**

| | |
|---|---|
| Bro. L. சண்முகம் | 9487031700 |

**ஈரோடு பிரதிநிதி**

| | |
|---|---|
| Bro. R. ஜெபசிங் சந்தோசம் | 9488560799 |

**திருச்சி பிரதிநிதி**

| | |
|---|---|
| Sis. R. பாப்பம்மாள் | 7502595483 |

**வேலூர் பிரதிநிதி**

| | |
|---|---|
| Sis. தேவிகா டோனால்ட் | 9488914440 |

**கோயம்புத்தூர் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Pas. ஜோயல் அனந்தராஜ் | 9843327841 |
| Bro. C. ஜாண் விக்டர் | 4222577596 |
| Bro. S.V. கிங்ஸ்டன் | 9442539044 |
| Bro. I. பில்தாஸ் | 9944269555 |

**மும்பை முன்னேற்ற பணியாளர்**

| | |
|---|---|
| Bro. P. பிரபாகரன் | 9768282699 |

**ஹைதராபாத் பிரதிநிதிகள்**

| | |
|---|---|
| Bro. டேனியல் செல்வராஜ் | 9849354493 |
| Bro. S. செல்லப்பா | 9866238643 |

**பெங்களூர் பிரதிநிதி**

| | |
|---|---|
| Bro. அர்னால்ட் மத்யூ மோசஸ்ராஜ் | 9886075639 |

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்



**ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பிற்காக.**

✞ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும், அவர்கள் வசிக்கும் 7000 கிராமங்களிலும் ஊழியர்கள் மற்றும் சபைகள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பேராயர். தேவதாஸ் அவர்கள் குடும்ப நலனுக்காக.**

✞ **பேராயர். தேவதாஸ்,** அவர்களின் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** மற்றும் பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தைப் பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாகப் பயன்படுத்த ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காக**

✞ தேவன் தந்த தரிசனத்தின்படி, பீல் ஆதிவாசி ஜனங்களின் மத்தியில் இந்த 2014 ஆம் ஆண்டிற்குள்ளாக 100 கிராம ஆலயங்களைக் கட்டும் தேவ பணியில் ஜெபித்து செயல்பட்டு வருகிறோம். இதற்கு எதிராக வரும் தடைகளை தேவன் நீக்கும்படியாகவும், இதற்கான தேவைகளைச் சந்திக்க தேவன் ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாகவும் ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் வெள்ளிதோறும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக**

✞ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் சுகமளிக்கும் ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். இந்த ஆராதனைகளில் உடலிலும் மனதிலும் குறையுள்ள ஜனங்கள் அநேகர் பங்குபெறவும், இதன் மூலம் அற்புதங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு தேவனண்டையில் சேர்க்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஊழியங்களுக்காக ஜெபிப்போரும் ஊழியங்களைத் தாங்குவோரும் எழுப்பப்பட**

✞ தேவன் தந்த தரிசனத் திட்டமான ஒரு கோடி பீல் ஆதிவாசி மக்களின் இரட்சிப்பின் பணியில் நடைபெறும் இந்த மாபெரும் ஊழியத்தினை ஜெபத்தில் தாங்கக் கூடிய ஜெபப் பங்காளர்களை ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்டங்களிலும் எழுப்பவும், இந்த மாபெரும் திட்டப்பணியின் தேவைகள் சந்திக்கப்பட அநேக ஆதரவாளர்கள் மற்றும் ஊழிய பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.

**பரிசுத்த வேதாகமங்களின் தேவைகளுக்காக**

✞ இந்த 2014 ஆம் ஆண்டிற்குள் சுமார் 5000 பீல் ஏழை ஆதிவாசி விசுவாசிகளுக்கு குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். இதுவரை 1500 வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்பட்டமைக்காக தேவனைத் துதிக்கிறோம். ஒரு வேதாகமத்திற்கு ஆகும் செலவு ரூ. 100 வீதம் 3500 வேதாகமங்களுக்கான தேவைகளான ரூ. 3.5 இலட்சங்கள் சந்திக்கப்படவும், விசுவாசிகளுக்கு வேதத்தின் மூலம் ஒரு பெரிய ஆசீர்வாதத்தினைக் கட்டளையிடவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷனின் வளர்ச்சிக்காக.**

✞ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.

**ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காக**

✞ பணித்தளத்தில் செயல்பட்டு வரும் **ஷாரோன் நினைவு மருத்துவமனைக்காகவும்,** அதில் பொறுப்பேற்றுள்ள **Dr. இன்பக்குமார்** அவர்களுக்காகவும், இந்த மருத்துவமனை மூலம் அநேக ஏழை ஆதிவாசி ஜனங்கள் பயனடையவும், இதன் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட்டு, தேவ நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் தலைமை மற்றும் கிளை அலுவலகங்களுக்காக**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம், சென்னை, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் மார்த்தாண்டம் கிளை அலுவலகங்களில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வரும் நமது சகோதர சகோதரிகளுக்காகவும், மேலும் ஊழியத்தில் தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளைச் சேகரித்து அனுப்பும் பிரதிநிதிகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

## ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகைகளுக்காக

✞ **23.08.2014 அன்று மாலை நாகர்கோவிலிலும், 24.08.2014 அன்று மாலை சென்னையிலும்** நடைபெறவுள்ள ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகைகளுக்காக ஜெபியுங்கள். இந்த கூடுகையில் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தேவ செய்தியினையும், **பிஷப். தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்தியினையும் அளிக்கிறார்கள்.

- அநேக ஆயிர ஜனங்களை தேவன் அழைத்து வரும்படியாக ...
- பாடல், ஆராதனை, செய்தி வேளைகளில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான செயல்களுக்காக....
- செய்தியாளர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்த...
- சுதேச ஊழியர்களின் சாட்சி வேளையை தேவன் ஆசீர்வதிக்க...
- ஷாலோம் ஊழியங்களுக்கு தேவன் புதிய ஆதரவாளர்களை எழுப்பித் தரும்படியாக....
- பங்கு பெறும் ஜனங்கள் மிஷனெரி பாரத்தையும் தரிசனத்தையும் பெற்றுக் கொள்ள...
- மைதானம் முழுவதும் பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்ய....
- பணித்தள வீடியோ பட காட்சிகளை தேவன் ஆசீர்வதிக்க...
- கலந்து கொள்ளும் ஒவ்வொரு தேவ பிள்ளைகளையும் தேவன் ஆசீர்வதிக்க...
- அநேக ஜெப வீரர், வீராங்கனைகளை தேவன் எழுப்பித் தர...
- கால சூழ்நிலைகளுக்காக, ஒளி, ஒ–லி அமைப்புகளுக்காக....
- கூட்டத்தை ஒழுங்கு செய்கின்ற தேவபிள்ளைகளுடன் தேவன் இருந்து ஞானத்தைத் தந்து செயல்படுத்த...
- இந்த கூடுகைக்கு விரோதமாக செயல்படுகிற அந்தகார வல்லமைகள், பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட, கூட்டத்தின் தேவைகள் சந்திக்கப்பட...



# ஷாலோம் - வேத வினாப் போட்டி **16**

**பதில் எழுதுக :**

1. ஒகின் ராஜ்ஜியமான அறுபது பட்டணங்களுள்ள தேசம் எது?
2. கர்த்தருடைய நல்ல பொக்கிஷ சாலை எது?
3. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக எது கரைந்தது?
4. யோனத்தான் யாரைத் தன் ஆத்துமாவைப் போல சிநேகித்தான்?
5. இடி முழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு கர்த்தர் எதை ஏற்படுத்துகிறார்?
6. யாருடைய வழக்கை கர்த்தர் விசாரிப்பார்?
7. யாருக்கு புத்திமதி விசனமாயிருக்கும்?
8. இயேசு உயிர்த்தெழுந்த பின் யாருக்கு முதல் முதல் தரிசனமானார்?
9. "ஜீவ அப்பம் நானே" வாசிப்பது எங்கே?
10. தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினவன் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **18.08.2014**

**கடந்த வேத வினா போட்டிக்கான சரியான விடைகள் :**

1. வீம்புக்காரர் மேல். சங். 73 : 3
2. கன்னிகைகளை. சகரியா 9 : 17
3. ஆட்டுக்குட்டியானவர். வெளி. 5 : 7
4. ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பாள். 2 சாமு. 21 : 10
5. ஓசியா. 12 : 5
6. மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரி. நீதி. 11 : 22
7. துக்கிப்பு. பிர. 7 : 3
8. கமாலியேல். அப். 5 : 34
9. கண்காணிப்பை விரும்புகிறவன். 1 தீமோ. 3 : 1
10. தீர்மானிக்கப்பட்ட அழிவு. ஏசா. 10:22

**கடந்த வேத வினாப் போட்டி 15 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 18 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. Sis. ஹெப்சிபா தாமஸ், சென்னை. 2. Sis. ஆலிவ் ஜெயபாலன், கோவை.**
**3. Bro. செல்வராஜ் சாலமோன், திருநெல்வேலி மாவட்டம்.**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் அதன் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** என்ற இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகளில்***
***எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**
Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

*குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப,*

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கின் பெயர் | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tiruchendur Road Branch - Tuticorin** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

## நாட்டு நடப்புச் செய்திகள்

உலகக் கோப்பை கால்பந்து போட்டியை ஜெர்மனி வென்றுள்ளது. 24 ஆண்டுகளுக்கு பிறகு ஜெர்மனி இந்தப் பட்டத்தை வென்றுள்ளது. மிகவும் விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில் ஜெர்மனி, அர்ஜெண்டினாவை 1 – 0 என்னும் கணக்கில் வென்று மிகவும் மதிப்பு வாய்ந்த இந்தக் உலக் கோப்பையையும், உலகப்பட்டத்தையும் வென்றது. ஆட்டத்தின் உபரி நேரத்தின் 23 ஆவது நிமிடத்தில், ஜெர்மனியின் கோயட்ஸ் ஒரு கோல் அடித்து, தமது அணி உலகச் சேம்பியன் பட்டத்தைப் பெற உதவினார்.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதிஷ் தவன் ஏவு தளத்தில் இருந்து இந்தியாவின் பி.எஸ்.எல்.வி. சி – 23 ராக்கெட் ஐந்து வெளிநாட்டு செயற்கைகோள்களுடன் விண்ணில் ஏவப்பட்டது. பல கோடி டாலர்கள் பெறுமதிப்புள்ள செயற்கைகோள்களை ஏவும் வர்த்தகத்தில், இந்தியா ஒரு வளர்ந்து வரும் சக்தியாக விளங்குகிறது.

சென்னை புறநகர்ப் பகுதியான மவுலிவாக்கத்தில் ஒன்றில் அடுக்குமாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் அநேகர் உயிரிழந்துள்ளனர். இந்த சம்பவம் நடந்தவுடனேயே அருகில் இருந்தவர்களும் காவல்துறையினரும் தீயணைப்புப் படையினரும் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கடந்த ஆண்டு, இந்தியாவில் 248 வகை புதிய வகை உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, கொல்கத்தாவை தலைமையகமாகக் கொண்டுள்ள இந்திய விலங்கியல் ஆய்வம் தெரிவித்துள்ளது. இவற்றில் பெரும்பாலானவை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலும், கிழக்கு இமாலயப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்பட்டவை என்று அந்த ஆய்வகத்தின் இயக்குநர் டாக்டர் கே. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய உயிரினங்களில் கூடுதலானவை பூச்சிகளே என்று கூறும் அவர், இவற்றின் வாழ்விடங்களுக்கு, மனிதர்களால் ஏற்படும் பாதிப்பினால் அவற்றின் எதிர்காலம் கேள்விக்குரியதாகவும், கவலைக்குரியதாகவும் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

நன்றி : www.bbc.co.uk/tamil


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



நாகர்கோவிலில்
ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை
23-08-2014
சனிக்கிழமை
நேரம் : மாலை 5.30 மணி
ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி மைதானம்
நாகர்கோவில்
தலைமை
பேராயர். M.I. கேசரி
(கன்னியாகுமரி திருமண்டல முன்னாள் பேராயர்)
பணித்தள செய்தி
பேராயர். V. தேவதாஸ்
(ஷாலோம் ஊழியங்கள், குஜராத்)
சுதேச ஊழியர்களின் சாட்சி...
பணித்தள ஊழிய வீடியோ படக்காட்சி...
அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...
பாடல் & ஆராதனை
இயேசு விடுவிக்கிறார் குழுவினர்,
நாலுமாவடி
சிறப்புச் செய்தி & ஜெபம்
சகோ. மோகன் சி. லாசரஸ்
இயேசு விடுவிக்கிறார் ஊழியம், நாலுமாவடி
மறவாது ஜெபியுங்கள்!
தவறாது பங்குபெறுங்கள்!!
தொடர்புக்கு
சகோ. G. செல்வதுரை - 9487689869,
சகோ. R. ஜான் ஶ்ரீதர் - 9698844511
சகோ. S. சாம் குணசீலன் - 9345675468



சென்னையில்
ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை
24 ஆகஸ்ட் 2014
ஞாயிற்றுக்கிழமை
மாலை 5.30 மணி
St. ஜார்ஜ் உயர்நிலைப் பள்ளி மைதானம்
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
சென்னை
பாடல் & சிறப்பு ஆராதனை
Pr. ஆல்வின் தாமஸ்
ரூஹா ஊழியங்கள், சென்னை
பணித்தள செய்தி
பேராயர். V. தேவதாஸ்
(ஷாலோம் ஊழியங்கள், குஜராத்)
சிறப்புச் செய்தி & ஜெபம்
சகோ. மோகன் சி. லாசரஸ்
இயேசு விடுவிக்கிறார் ஊழியம், நாலுமாவடி
சுதேச ஊழியர்களின் சாட்சி...
பணித்தள ஊழிய வீடியோ படக்காட்சி...
அனல் மூட்டும் எழுப்புதல் செய்தி...
சகோ. M. ஜான் ஜெயசிங் - 9698244577
சகோ. R. ஜான் ஸ்டான்லி - 9698244599
சகோ. S. சாம் குணசீலன் - 9345675468